International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வள்ளலார் பேசும் இறைநெறி கொள்கை

**சு. நந்தினி**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் சி. ஆறுமுகம்**
உதவிப்பேராசிரியர், நெறியாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர். 608 002

**ஆய்வுச்சுருக்கம்**

இறைநிலை அவரவர் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு இறைவனை அணுகுகின்றார்கள். ஆனால் வள்ளலார் கூறும் இறை நிலையில் பல அனுபவங்களை கையாண்டுள்ளார். சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் என்று மூன்று படிநிலைகள் இருக்கின்றன. இதில் வள்ளலார் பெற்றது ஞானதேகம். இறைவனை அணுகும் போது தூய உடலும், தூய்மையான மனமும் கொண்டிருக்க வேண்டும். இறையனுபவம் என்பது தனிமனிதனின் ஆன்மிக வளர்ச்சியை உணர்த்துகிறது. உயிர் அனுபவத்தில் உயிர் தனது உண்மை நிலையை இறைவன் திருவருள் உணர்த்தி, இறக்கப் பண்பினை உண்டாக்குகிறது. உலக உயிர்களிடத்தில் கருணைக் கொண்டு எவ்வுயிரையும், தம்முயிரெனக் கருதுவது இறை நிலையாகும். ஒரு மனிதனுக்கு இறைச்சிந்தனையும், இரக்கச்சிந்தனையும் பெற்றிருக்க வேண்டும். இவற்றை வள்ளலார் கூறுவது இறைச் சிந்தனையை ஜோதி என்கின்றார். இரக்கச்சிந்தனையை ஜீவகாருண்யம் என்கின்றார். கடவுள் வழிபாடுகளில் உருவ வழிபாட்டில் சிறு தெய்வ வழிபாடு, மூடநம்பிக்கைகள், பழக்கங்கள், சாதி சமய வேறுபாடுகள் இவைகள் அனைத்தும் உருவ வழிபாட்டில் நடக்கின்றன. இதிலிருந்து அருவ வழிபாட்டில் மாறுகிறார். (புறவுலக பிணக்கை) மனம் ஒரு பொருளை பற்றும் தன்மைக் கொண்டது என்ற நிலையை உணர்ந்த வள்ளலார், அதிலிருந்து அருவுருவத்திற்கு மாறினார். கடவுளின் உண்மை நிலையை அணுக, ஞான சபையில் அருவுருவ வழிபாடு தொடங்கி இறைச்சிந்தனையை வளர்க்க ஜோதி வழிபாடே இறைவழிபாடு எல்லா உயிர்களிடமும் அன்பை காட்டி பசிப்பிணி போக்கி ஜீவகாருண்யத்துடன் இருக்க தருமச்சாலையில் உயிர் வழிபாடு ஏற்படுத்துகிறார். சன்மார்க்கத்தின் நெறியின் படி இறைவன் ஒருவனே, அவனே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

**முன்னுரை**

இந்த பிரபஞ்சத்தில் இறை நெறியை அடைய விரும்பும் அருளாளர்கள், இறை அனுபவங்களை பல முறைகளில் கையாண்டுள்ளார்கள். இந்த அடிப்படையில் இறை அனுபவத்தை Mystic என்று மேலைநாட்டு திறனாய்வாளர்கள் கூறியுள்ளார்கள். 19ஆம் நூற்றாண்டில் ஆன்மீக உலகத்திற்கே கலங்கரை விளக்கமாக தோன்றிய வடலூர் ராமலிங்க அடிகள், இறை அனுபவத்தை எப்படி அணுக வேண்டும் கடவுளை எப்படி வழிபட வேண்டும் இன்று நிலையை கூறுகிறார். உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவ அனுபவம் என்ற இறை அனுபவங்களை எடுத்து இயம்புகின்றார். இவர் காட்டும் அனுபவ சிந்தனைகள் இறைச்சிந்தனை இறைவழிபாடாகவும், இரக்கச் சிந்தனையை, உயிர்

வழிபாடாகக் கொண்டு இறைவனின் பேரருளைப் பெற்ற உயிர், இறைவன்வேறு, தான்வேறு என்று வேறுபாடு இல்லாமல் இறைமயமாகி இறைவனை வழிபட வேண்டும் என்று கூறுகிறார். உயிர் இறையை நம்மால் முடிந்தவரை பணி செய்தல் வள்ளலாரின் நோக்கமாகும்.

**இறைநிலை**

இறைநிலை பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து உள்ள, ஆதி அந்தமில்லாத தன்னூக்க ஆற்றல் கொண்ட, பேராற்றல், பேரறிவு, பெருங்கருணை உடைய ஆதிபரம் பொருளாகும். இதுவே அனைத்துப் பொருட்களையும், உயிர்களையும் படைத்து, காத்து, இயக்குகிறது. வேதாத்திரியத்தின்படி, இறைநிலை என்பது ஒரு சுத்த வெளியாகும். இயற்கையின் தன்மாற்றமாகவும், மனித அறிவின் மேம்பாட்டுடன் தொடர்புடைய தத்துவமாகவும் விளக்கப்படுகிறது.

வாழ்க்கையில் ஏற்பட்ட புலனுணர்ச்சி அனுபவங்களால் திறன் பெற்ற அறிவின் சிறப்பு நிலையில் தோன்றியதே இறைநிலை எனப்படும். இறைநிலையானது புலன்களுக்கு எட்டாத (Mystic) மறைபொருள் எனப்படும்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

**பகவன் முதற்றே உலகு** (குறள்.1)

என்று வள்ளுவர்,

**சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்**

**அவன் அருளாலே அவன்தான் வணங்கி** (திருவாசகம், வ, 17,18)

என மணிவாசகரும்,

**அருளாலே அருளிறை அருள்கின்ற பொழுதங்**

**கனுபவ மாகின்ற தென்னடி தாயே**

**தெருளாலே மருளாலே தெரியாது தெரியும்**

**திருநட இன்பம்என் றறியோ மகளே** (அருட்பா, பா. 2994)

என வள்ளலாரும் கூறுகிறார்.

மனிதன் தன் நிலையிலிருந்து மாறுபடாமல் கருணை உள்ளத்துடன் இருக்க இறைவனிடம் சேர்வதால் கடவுளின் முழுமையான அருள் உண்டாகும். உயிர் இறைவனிடம் ஒன்றிக் கலந்து இறை இன்பம் துய்க்கும் நிலையை இறைநிலையாகும். இறைவனோடு கலக்கும் இன்பத்தை உரை உணர்வு கடந்த இறை இன்பமாக அருளாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை மணிவாசகர்,

**உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே**

**யான், உன்னை உரைக்கும் ஆறு, உணர்த்தே** (திருவாசகம். கோவில் திருப்பதிகம். பா, 3)

**உணர்வரிய பேரின்ப அனுபூதி உணர்விலே**

**உணர்வார்கள் உள்ளபடிகாண்** (தாயு. சுகவாரி. பா, 1) என்று தாயுமானவர்,

**உணர்ந்தவர் தமக்கும் உணர்வரி யான்என்**

**உள்ளகத் தமர்ந்தனன் என்றாள்** (அருட்பா. பா. 5680)

இத்தகைய இறைநிலைகளை வார்த்தையால் கூறிட முடியாது. மனதால் மட்டுமே உணர முடியும், என்கின்றார் வள்ளலார்.

இறைவழிபாடு, அடியார் உறவு, தூய கட்டுபாடான வாழ்க்கை, பிற உயிர்களிடத்து அன்புகாட்டுதல் போன்ற வாழ்க்கை நெறிமுறைகளில் ஈடுபாடு கொண்டு விளங்கும். இதனால் உயிரைப் பற்றியுள்ள மலங்களின் தாக்கம் தணியும். உயிர் தூய்மை அடையும். உயிர் தன்னை உணர்வதற்கான நிலை இதுவாகும்.

**வள்ளலாரின் இறை அனுபவம்**

வள்ளலார் கூறும் இறை அனுபவங்கள் மூன்று நிலைகளை உடையது.

உயிர் அனுபவம் (சுத்த தேகம்)

அருள் அனுபவம் (பிரணவதேகம்)

சிவ அனுபவம் (ஞானதேகம்)

**உயிர்அனு பவம்உற் றிடில்அத னிடத்தே**

**ஓங்குஅருள் அனுபவம் உறும்அச்**

**செயிரில்நல் அனுப வத்திலே சுத்த**

**சிவஅனு பவம் உறும் என்றாய்**

**பயிலுமூ வாண்டில் சிவைதரு ஞானப்**

**பால்மகிழ்ந் துண்டுமெய்ந் நெறியாம்**

**பயிர்தழைந் துறவைத் தருளிய ஞான**

**பந்தன்என் றோங்குசற் குருவே** (அருட்பா, பா. 3227)

உயிர்தன்னை உணர்தல், உயிர் அனுபவம் ஆகும். தன்னை உணர்ந்த உயிர், இறைவன் அருளைப் பெறுதல், அருள் அனுபவமாகும். இறைவன் அருளைப் பெற்ற உயிர், தான் வேறு இறைவன் வேறு என்ற வேறுபாடு இல்லாமல் இறைநிலை எய்துதல்,

சிவ அனுபவமாகும்.

1. உயிர் அனுபவம்

உயிர் அனுபவம் என்பது, உயிர் தனது உண்மை நிலையை, இறைவன் திருவருள் உணர்த்துகின்றது. உயிரின் உண்மை நிலை எது எனில், தனது இயற்கை குணமாகிய இரக்கப் பண்பினை உணர்ந்து, என் உயிரையும் தன் உயிர் எனக் கொண்டு வாழும் நிலையாகும்.

உயிர் தன்னை உணரும் போது, தான்வேறு இந்த கருவிகள் வேறு என்று உணரும். தன்னை அவற்றிற்கு அப்பாற்பட்ட ஒன்றை உணர்ந்து, அவைகளிலிருந்து சற்று விலகி நிற்கின்றன. இயற்கை விளக்கமாகிய இரக்கப் பண்பினை உணர்ந்து, அனைத்து உயிர்களிடத்தும் இறைவன் விளங்குகின்றான். என்பதை அறிந்து, அவைகளிடத்து அன்பு கொண்டு விளங்கும். நிலையில்லாத சிற்றின்பமாகிய இவ்வுலக இன்பத்தை விடுத்து எல்லையில்லாத அன்பு கொண்டு விளங்கும். தனது பரந்துபட்ட நிலையை உணரும். அதே சமயம், தனது உண்மை நிலையை உணர்த்திய இறைவனின் திருவருளில் தான் அடக்கம் என்பதையும் அறியும். உயிர் எங்கும் பரந்து பட்டு விளங்கும் நிலையாகும்.

**தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித்**

**தனிப்பர நாதமாந் தலத்தே**

**ஒத்ததன் மயமாம் நின்னைநீ இன்றி**

**உற்றிடல் உயிர் அனுபவம்**

(அருட்பா. பா. 3228)

இறைவனது அருளியற் காட்சியை உயிர் நேரடியாகத் தனித்து உணர்தல், எவ்வுயிரையும் தம்முயிர் எனக்கொள்ளும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு கொண்டு விளங்குதல் இவைகள் அனைத்தும் உயர் அனுபவ நிலைகள் என்று வள்ளலார் கூறுகின்றார்.

2. அருள் அனுபவம்

உயிரின் உண்மை நிலையை உணர்ந்து, எவ்வுயிரையும் தம் உயிர் போல் எண்ணி, இரக்கப் பண்பு கொண்டு விளங்கிப் பிற உயிர்களுக்கு பணி செய்வது.

தன்னுடைய உண்மை நிலையை உணர்த்த உயிர், இறைவனுடைய திருவருளைப் பெறும் இறவாநிலை எய்தும், அந்நிலையில் உலக உயிர்களுக்குப் பெருகிய அளவில் பணிசெய்யும். இந்நிலை அருள் அனுபவம் எனப்படும்.

**தனிப்பர நாத வெளியின்மேல் நினது**

**தன்மயம் தன்மயம் ஆக்கிப்**

**பனிப்பிலாது என்றும் உள்ளதாய் விளங்கிப்**

**பரம்பரத் துட்புற மாகி**

**இனிப்புற ஒன்றும் இயம்புறா இயல்பாய்**

**இருந்ததே அருள் அனுபவம்**

(அருட்பா, பா, 3229)

அருள் என்பது கடவுளின் தயவு, கடவுள் இயற்கை விளக்கம். ஜீவகாருண்யம் என்பது ஜீவர்கள் தயவு, ஜீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். இதனால் தயவுக் கொண்டு தயவுப் பெறுதலும், விளக்கத்தைக் கொண்டு விளக்கத்தை பெறுதலும் கூடும். அருள் அனுபவங்களை ஜீவகாருண்யத்தைக் கொண்டு பெற முடியும்.

3. சிவ அனுபவம்

பரம்பர வெளி கடந்து, பெருவெளியில் இறைவனோடு இரண்டறக் கலந்து உயிர் விளங்குவது, சிவ அனுபவமாகும்.

**உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல்**

**உள்ளதாய் முற்றும்உள் ளதுவாய்**

**நள்ளதாய் எனதாய் நானதாய் தனதாய்**

**நவிற்றருந் தானதாய் இன்ன**

**விள்ளொணா அப்பால் அப்படிக் கப்பல்**

**வெறுவெளி சிவஅனு பவம்என்**

**றுள்ளுற அளித்த ஞானசம் பந்த**

**உத்தம சுத்தசற் குருவே**

(அருட்பா, பா. 3230)

பெருவெளியில் இறைவனின் திருவருளோடு இரண்டற கலந்து விளங்கும் உயிர், தனக்கெனத் தனித்தன்மை எதுவும் இல்லாமல், முற்றும் இறையருள் மயமாகி, தெய்வநிலை பெற்று விளங்கும் என்பது சிவ அனுபவம் என்று கூறுகிறார்.

**வள்ளலார் காட்டும் இரு சிந்தனைகள்**

**இறைச்சிந்தனை (சத்விசாரம்)**

**இரக்கச்சிந்நனை (பரோபகாரம்)**

இறைவன் அருளைப் பெறுவதற்கு இவ்விரு சிந்தனைகளும் இணைத்தே கூறப்படுகின்றன. ஒன்று தவிர்த்து மற்றொன்றை வள்ளலார் காட்டவில்லை. சத்வி சாரம் என்பது, கடவுளது புகழையும், ஆன்மாவின் உண்மையையும் விசாரித்தல். பரோபகாரம் என்பது, பிற உயிர்களிடம் அன்பு காட்டி பணிபுரிதல்.

சத்விசாரம் இறைச்சி சிந்தனையை வளர்ப்ப தற்கும், பரோபகாரம் என்பது இரக்கச் சிந்தனை உடையது.

இறைவனது அருளைப் பெறுவதற்கு காமம், குரோதம் முதலிய அகப்பற்றுக்களை அழித்தல் வேண்டும். அந்த அகப்பற்றுக் களை அழிப்பதற்கு கூறப்பட்ட சாதனம் **'சத்விசாரம்'** எனப்படும். வள்ளலார் அகப் பற்றுக்களை அழித்தல் என்பதனை மட்டும் கூறாமல், புறப்பற்றாகிய **'ஆன்மநேயத்தை'** வளர்க்க வேண்டும் என்று கூறுகிறார். ஆன்ம நேயமாகிய மூலதனத்தைக் கொண்டுதான், இறைவனது அருளாகிய ஆன்ம லாபத்தைப் பெற முடியும். புறப்பற்றாகிய ஆன்ம நேயத்தை வளர்ப்பதற்குக் கூறப்பட்ட சாதனம் **'பரோபகாரம்'** எனப்படும். அகப் பற்றினை அழிப்பதற்குச் சத்விசாரமும், புறப் பற்றினை வளர்ப்பதற்குப் பரோபகாரமும் சாதனங்களாக அமைகின்றன. இவ்விரு சாதனங்களையும் வளர்ப்பதற்கு வள்ளலார் கூறும் வழிபாட்டு முறைகள் இருவகையாக அமைந்துள்ளன.

இறைவழிபாடு, இறைச் சிந்தனையை நோக்கியது. உயிர் வழிபாடு, இரக்கச் சிந்தனையை நோக்கியது. அகத்தே கண்ட அருட்காட்சியினைப் புறத்தே விளக்குவதற் கென அமைக்கப்பட்டது **'சத்திய ஞானசபை'**. அகத்தே உணர்ந்த அருள் உணர்வாகிய இரக்க உணர்வைப் புறத்தே புலப்படுத்துவ தற்கென அமைக்கப்பட்டது **'சத்திய தருமச் சாலை'** இவ்விரு அமைப்புகளும் வள்ளலாரின் இரு வழிபாட்டு முறை.

### இறைவழிபாடு ( ஜோதி வழிபாடு)

இறைவனது அருளை பெறுவதற்கு, உயிர் தனது சிறுமையை உணர்தல் வேண்டும். அவனிடம் தனது குறையினை நீக்க முறையிட வேண்டும். இதற்கு இறை சிந்தனை வழியாகும். இச் சிந்தனையை வளர்ப்பதற்கென வகுக்கப்பட்ட சாதனம் இறைவழிபாடாகும். இந்த வழிபாட்டினைச் ஜோதி வழிபாடாக வள்ளலார் சத்திய ஞான சபையில் அமைக்கின்றார்.

தொடக்ககாலத்தில் உருவவழிபாட்டை மேற் கொண்ட வள்ளலார், சமயங்களுக்கிடையே ஏற்படும் பிணக்கினுக்கு, (சண்டை, மனக் கசப்பு, சச்சரவு) உருவவழிபாடு காரணமாக இருந்தது. பிறகு அருவ வழிப்பாட்டை அடைகிறார். புறவுலகப் பிணக்கையை தவிர்க்க அருவுருவ வழிபாட்டில் வாய்ப்பு உள்ளது என்று, அருவுருவ வழிபாட்டே ஜோதி வழிபாடு என்கின்றார்.

புறவுலகப் பிணைக்கிணக்கில் மனம் ஒரு பொருளைப் பற்றுகின்ற வாய்ப்பும் உள்ளது. என்றும் பொது நெறியை வளர்க்கவும், வலியுறுத்தவும் அருவுருவ வழிபாடு சிறந்த சாதனமாக அமைகின்றன. இந்த அருவுருவ வழிபாட்டில் மனிதனுக்கிடையே ஏற்படும். கோபம், ஆசை, பொறாமை போன்று தீய குணங்களை, சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபையில் ஏழு திரைகளை நீக்கி மனிதனின் தத்துவத்தை உலகிற்கு உணர்த்துகிறார்.

கரைவின் மாமாயைக் கரும்பெருந்திரையால்
அரைசது மறைக்கும் மருட்பெருஞ்ஜோதி (814)

பேருறு நீலப் பெருந்திரை யாதனால்
ஆருயிர் மறைக்கும் மருட்பெருஞ்ஜோதி (816)

பச்சைத் திரையாற் பரவெளி யதனை
அச்சுற மறைக்கும் மருட்பெருஞ்ஜோதி (818)

செம்மைத் திரையாற் சித்தறு வெளியே
அம்மையின் மறைக்கும் மருட்பெருஞ்ஜோதி (820)

பொன்மைத் திரையாற் பொருளுறு வெளியே
அன்மையின் மறைக்கும் மருட்பெருஞ்ஜோதி (822)

வெண்மைத் திரையான் மெய்ப்பகுதி வெளியே
அன்மையின் மறைக்கும் மருட்பெருஞ்ஜோதி (824)

கலப்புத் திரையாற் கருதனுவ பவங்களை
அலப்புற மறைக்கும் மருட்பெருஞ்ஜோதி (826)

(அகவல் வரிகள்)

### உயிர் வழிபாடு (ஜீவகாருண்ய வழிபாடு)

இறைவன் உயிர் உறவினை வளர்ப்பதற்குச் ஜோதி வழிபாடு காட்டப்படுவது போல, மற்றொரு உயிரிடம் கொள்ளும் அன்பினை வளர்ப்பதற்கு ஜீவகாருண்ய வழிபாடே சிறந்தது. என்கின்றார். இறைவன் அருளைப் பெறுதல் என்பது ஆன்மீகத்தின் இலக்கு. அதற்கு வள்ளலார் காட்டும் வழி ஜிவகாருண்யம். பசி தவிர்த்தலும் அதற்கு அவர் காட்டும் நடைமுறை சாதனங்கள். அகத்தே இறைவன் அருட்காட்சியினைக் பெறுவதற்குப் புறத்தே பிற உயிர்களுக்குப் பணி புரிதல் வேண்டும் என்பது அவர் வேண்டுகோள். ஒரு மனிதனுக்கிடையே

ஏற்படும். அற்றார் அழிப் பசியை தீர்க்க வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையை 1867ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரையிலும் அணையா அடுப்பாய் எரிந்து வருகின்றன.

உயிர் வழிபாட்டில், ஜீவகாருண்யமே சிறந்த ஜோதி வழிபாடு என்கின்றார். தருமச் சாலையில் உள்ள வழிபாட்டை அமைத்து, எல்லா ஜீவர்களையும் ஒருமை நிலையாக இருக்க வேண்டும். என்ற கொள்கையை கையாண்டுள்ளார்.

**வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்**

**வாடினேன் பசியினால் இளைத்தே**

**வீடுதோறிரந்தும் பசியறா தயர்ந்த**

**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்**

**நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்**

**நேர் உறக் கண்டுளந் துடித்தேன்**

**ஈடின்மானிகளாய் ஏழைகளாய் நெஞ்**

**கிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்**

(அருட்பா. பா. 3471)

## இறைக்கொள்கை

**அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னத்**

**இன்புருவம் ஆயினைநீ எழில்வாதவூர் இறையே** (அருட்பா. பா. 3259)

அன்புருவம் சுத்த தேகம், அருளுருவம் பிரணவதேகம், இன்புருவம் ஞானதேகம் இதில் வள்ளலார் இறையை ஞானதேகம் உடையது. எனவே ஆன்மா ஞானதேகம் பெறுவதென்பது இறையோடு இரண்டறக் கலப்பதாகும். எவ்வுயிரையும் தம்முயிரெனக் கருதும் கருணை ஒழுக்கத்தையும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும் கைக்கொண்டு இறைவனை நாம் இடையறாது வணங்கி வந்தால் நமது உடம்பு தூய உடம்பாகி அன்புருவாக அமையும். அவ்வன்புருவே முதிர்ந்து அருளுருவாகும். இவ்வுரு அமையும் போது திருவருள் முழுமையாகி அனுபவ மாகும்.

சன்மார்க்க நெறியின்படி இறைவன் ஒருவனே. அவனே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்கின்றார். இறைக்கொள்கையை அணுகும் போது சிறு தெய்வவழிபாடு கூடாது. அத்தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கூடாது. புலால் உண்ணலாகாது, சாதி, சமயவேறுபாடுகள் கூடாது அருட்பெருஞ் ஜோதி என்னும் வடிவம் அன்புருவாய் தொடங்கி அருளுருவாய் வளர்ந்து இன்புருவாய் நிறைவதே இறைநிலை என்கின்றார்.

## முடிவுரை

வள்ளலார் காட்டும் இறையனுபவம், தனி மனிதனின் ஆன்மீக உலகத்தில் இருக்கும், ஓர் உயிர் பிற உயிர்களிடம் அன்பு காட்டுவதன் மூலமாகத்தான் இறையருளைப் பெற முடியும் என்கின்றார். பல உயிர்களை நேசித்து அவைகளிடம் ஜீவகாருண்யத்துடன் நடப்பதே கடவுள் வழிபாடு என்கின்றார். மனம் ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றும் தன்மையுடையது. அதனால் அருவ வழி பாட்டில் இது ஏற்பட வாய்ப்பில்லை உண்மை யான இறையருளை ஜோதி வழிபாட்டில் பெற முடியும் என்ற உண்மையை உலகத் திற்கு உணர்த்துகின்றார்.

## துணைநூற்பட்டியல்

1. எஸ். கௌமாரீஸ்வரி. திருக்குறள் (உரையுடன்) சாரதா பதிப்பகம், சென்னை 600014, முதற்பதிப்பு, செப். 2004.
2. திருவாசகம், எஸ். ராஜம், 5,தம்புச் செட்டித் தெரு,சென்னை1,முதற்பதிப்பு, 1956.
3. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, திருவருட்பா (மூலமும் உரையும்), சுத்த சன்மார்க்க நிலையம், நெய்வேலி மெயின் ரோடு, வடலூர், 607303, முதற்பதிப்பு. 1988.
4. தாயுமானவர், சுகவாரி, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை 639115, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி, முதற்பதிப்பு. 1963, இரண்டாம் பதிப்பு, 1978.
5. தவத்திரு சக்திவேல் சுவாமிகள், வள்ளலாரின் இறை அனுபவங்கள், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை 34, முதற்பதிப்பு, 2023.
6. சுவாமி சரவணானந்தா, அருட்பெருஞ்ஜோதி அகவல்(உரை விளக்கம்), தயவு நூல் வெளியீட்டு அறக்கட்டளை, தயவு சத்திய ஞான கோட்டம், 4/12, நாகசாமி அய்யர் சந்து கீழரத் வீதி, திண்டுக்கல், 624001.
7. டாக்டர், ம. பொ. சிவஞானம். வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, தமிழ் நிலையம், 40,சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை 17, முதற்பதிப்பு, 2014.